1969 மார்ச் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிழக்கு தஞ்சை, மேற்கு தஞ்சை என்றிருக்கிறது. மேற்கு தஞ்சையை ஏன் உறுப்பினர் வெறுக்கிறார்கள் என்று தெரியவில்லை. கிழக்குத் தஞ்சைக்குள்ளேயே எல்லாக் காரியங்களையும் அடக்கிவிடவேண்டும் என்பதில்லை. நிர்வாகம் இப்போது செம்மையாகத்தான் நடைபெற்று வருகிறது.

திரு. நா. வீராசாமி : இப்போதிருக்கிற தாலூக்காக்கள் எல்லாம் எவ்வளவோ வருடங்களுக்கு முன்னால் அப்போதிருந்த ஜனத்தொகை, அப்போதிருந்த வருவாய் இவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டவைகளாகும். ஆனால் இப்போது அப்படி பிரிக்கப்பட்ட வட்டங்களில் ஜனத்தொகை பெருகியிருக்கிறது. வருவாயும் பெருகியிருக்கிறது. இதையெல்லாம் அடிப்படையாக் கொண்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வாலாஜா போன்ற பெரிய வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம் அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் அச்சாணி போன்று, அடித்தளமாக நல்ல முறையில் அமைந்திருக்கிற நிர்வாக இயந்திரம் ரெவின்யூ இலாகா இயந்திரமாகும். வேறு பல இலாக்காக்களும் சமீப காலங்களில் வளர்ந்து முழுமை பெற்றனவே தவிர கட்டுக்கோப்பான அமைப்பைக் கொண்டுள்ள இலாகா ரெவின்யூ இலாகா தான். ஆகவே, அப்படிப்பட்ட ரெவின்யூ இலாகாவில் செய்யப்படுகிற மாற்றங்கள் அல்லது புதுத் திருப்பங்கள் இவை மூல அடித்தளத்திற்கு ஊறு நேராதபடி செய்யப்படவேண்டும்.

பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகம்.

*454 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்தை ஊத்துக்கோட்டை அல்லது பெரியபாளையத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இது பற்றி செங்கை மாவட்ட வளர்ச்சி மன்றம் அனுப்பிய பரிந்துரையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) பென்னலூர்ப்பேட்டை துணை வட்டத்தின் தலைமையிடத்தை வேறிடத்திற்கு மாற்றுவதற்குச் செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றம் செய்த பரிவுரை அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. கே. விநாயகம் : இந்த சப்-தாலூகா விஷயத்தில் தாலூக்கா ஆபீஸில்தான் ட்ரெஷரி இருக்கிறது. ஒரு தாசில்தார் முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறார். சப்-தாலூக்கா விஷயத்தில் ஒரு இன்டிபெண்டன்ட் டெப்டி தாசில்தாரைப் போடுகிறார்கள். அல்லது ஒரு டெப்டி தாசில்தாரைப் போடுகிறார்கள். அங்கு சப்-ட்ரெஷரி வசதியில்லாமல் போவதால் அந்தப் பகுதி மக்கள் பணம் ட்ரெஷரியில் செலுத்தவேண்டுமென்றால் தாலூக்கா ஹெட்க்வார்டர்ஸ்க்கு வரவேண்டிய கஷ்டம் இருப்பதால் சப்-தாலூக்கா என்ற காட்டிகரியையே எடுத்துவிட்டு முழு தாலூக்காவாக ஆக்குவதற்கு என்ன கஷ்டமிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழககன் : அது ஒரு நாளில் வரைபடம் வரைவது போன்ற காரியம் அல்ல. கூடுமான வரையில் சப் தாலூக்காக்களை இன்டிபெண்டன்ட் சப் தாலூக்காக்களாகவும், முழுமையான தாலூக்காகள் ஆக்கவும் பல்வேறு வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கருவூலம் தாலூகா தலைமை பீடத்தில் இருப்பதும் கூடுமானவரையில் சப் தாலூக்காக்களில் கருவூலங்கள் அமைக்கவும் முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன. பலவிடங்களில் அப்படி கருவூலங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன.

திரு டி. மார்டின் : இப்படி ரெவின்யூ அடிப்படையில் தாலூக்காக்கள் அமைக்காமல் சிவில் சப்ளேஸ் மூலம் அதிகப்படியான வேலை இருப்பதால் அந்த அடிப்படையில் தாலூக்காக்கள் அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சிவில் சப்ளேஸ் என்பது நிரந்தரமானதல்ல. இன்று ரேஷன் இருக்கிறது. குடும்பக் கார்டுகள் இருக்கின்றன. ஆனால் ஒரு நிலைமை ஏற்படுமானால், எங்குமே ரேஷன் தேவையில்லை என்றதொரு நிலை ஏற்படுமானால், எந்தயிடத்திலும் குடும்பக் கார்ட் முறை தேவையில்லை என்ற நிலை வருமானல் ஒரு விநாடிகூட தாமதம் ஏற்படாமல் இந்த சிவில் சப்ளேஸ் இலாகா கலைத்து விடப்படும் ஆகவே, நிரந்தரமற்ற ஒன்றை பின்பற்றி நிரந்தரமாக இருக்கிற ஒரு காரியத்தில் ஈடுபடுவது அவ்வளவு சரியானதல்ல.

Collections during Kalakshepams.

***455 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal to bring the collections made during Kalakshepams under the purview of the Entertainment Tax Act, 1939 ?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : காலட்சேபங்களுக்கு கேளிக்கை வரி விதிக்கும் உத்தேசம் ஒன்றுமில்லை.

திரு என். எஸ். வி. சித்தன் : கோவில்களைத் தவிர பிறயிடங்களில் நடத்தப்படுகிற காலட்சேபங்களுக்கு பெரிய தொகை வசூலிக்கப்படுகிறது. எனவே 1939-ம் ஆண்டு பொழுதுபோக்கு வரிச் சட்டத்தின்கீழ் காலட்சேபங் களில் வரும் வசூலுக்கு வரி விதிக்கப்பட்டால் அரசாங்கத்திற்கு ஒரு கணிச மான தொகை வருவாயாகக் கிடைக்கும் அல்லவா ? அப்படி இதுவரை யில்லாமலிருந்தாலும் இனியாவது அதுபற்றி பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கத்திற்கு வருவாய் அதிகம் கிடைக்கும் காரியத்தில் உறுப்பினர் அவர்களுக்குள்ள அக்கறையை நான் பாராட்டுகிறேன். அதற்கு நன்றியும் செலுத்துகிறேன். ஆனால் பொதுவாக இப்போது என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் சினிமாக்கொட்டகை யில் நடக்கிற சினிமாக் காட்சிகளுக்கும், அதுமாதிரி குதிரைப் பந்தயத் திற்கும் மட்டும்தான் இருக்கிறது. நாடகங்கள், டிராமாக்கள், நடனங்கள், இசைக் கச்சேரிகள், சர்க்கஸ் கம்பெனிகள், போட்டி விளையாட்டுகள் (ஸ்போர் ட்ஸ்) இப்படியெல்லாம் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் கூட நாம் என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் வசூல் செய்வதில்லை. உறுப்பினர் அவர் களின் கேள்வியின் முதல் பகுதியைப் பாராட்டுகிறேன். நல்ல யோசனை களை அவர்கள் சொல்லலாம். இப்படிப்பட்ட விதிவிலக்குகள் இருப்பதால் காலட்சேபங்களுக்கு கேளிக்கை வரி விதிக்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

திரு. மா. பொ. சிவஞானம் : நான் அறிந்தவரையில், காலட்சேபங் களுக்கு எங்குமே டிக்கட்ஸ் வைத்து கட்டாயமாக வசூலிக்கப்படுவதில்லை. தட்டு வசூல் மூலம் பணம் திரட்டி கோவில் திருப்பணிகள் செய்யப்படு கின்றன. ஆகவே, இந்தக் கேளிக்கை வரிச் சட்டம் அங்கே போவதற்கு வழியில்லை என்பதை அரசு ஒப்புக்கொள்கிறதா ?